# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

## S.C. NO. 159/2019

## PW 13

| | | |
|---|---|---|
| Name | : | கோவிந்தசாமி |
| Father's/Husband's Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.02.2025.

**Accused present.**

**முதல் விசாரணை -**

**(1)** நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம் நக்சலைட் தடுப்பு சிறப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் . கடந்த 10.06.2018 ம் தேதியன்று திருவண்ணாமலை தாலுக்கா காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 11.00 மணிக்கு உதவி ஆய்வாளர் சிவசங்கரன் என்பவர் சாரதா என்பவரின் புகாரை பெற்று நிலைய குற்ற எண் . 910/2018 சட்டப்பிரிவுகள் 302 இதச என்ற வழக்கை பதிவு செய்து மேல் நடவடிக்கைக்காக என் பார்வைக்கு வைத்தார் . அதை நான் பரிசீலனை செய்து இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு பகல் 12.45 மணிக்கு சம்பவயிடமான வேலாயுதம் கொட்டாய் , அய்யம்பாளையம் புதூருக்கு சென்று சாட்சிகள் தனகோட்டி , குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன் . **நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ .சா.ஆ.10.** சாட்சிகள் சாரதா , நிரோஷா, நிஷா, நிஷாந்தி, சாந்தி, அண்ணாமலை, பலராமன்,ஆறுமுகம், ஏழுமலை, கார்த்திக்

ஆகியோர்களை விசாரணை செய்து 13.45 மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தேன் . திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கில் இறந்த தேவேந்திரன் (45) த/பெ. பச்சையப்பன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன் . **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ .சா.ஆ.11**. பிரேத பரிசோதனை செய்ய மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன் . பின்னர் 10.06.2018 ம் தேதியன்று 17.15 மணிக்கு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் சங்கர் , மற்றும் அவரின் மகனான இளஞ்சிறார் ஆகியோர்களை பிடித்தேன் . எதிரி சங்கர் விசாரணையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் தனக்கோட்டி, குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன் . எதிரி எங்களை பின்னர் அய்யம்பாளையம் புதுார் ஆரிய முத்து கவுண்டர் மகன் பச்சையப்பன் என்பவரின் பூந்தோட்டத்தில் இருந்து ஆஜர் செய்த மரக்கட்டை ஒன்றை மகஜரில் கைப்பற்றினேன் .**அந்த கைப்பற்றுதல் மகஜர் அ .சா.ஆ.12**. அந்த மரக்கட்டை சா.பொ.1 தான்.வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் . 14.06.2018 ம் தேதியன்று உடல் உள் உறுப்புகளை வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு இராசயன பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன் . பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் வழக்கு பதிவு செய்த உதவி ஆய்வாளரையும் பிரேத அலுவலுக்கு சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணனையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விசாரணை முடித்து இவ்வழக்கில் எதிரி சங்கர் மீது இதச பிரிவுகள் 294(பி), 302 ன் படி வழக்கு பதிவு செய்து இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C. Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.